பள்ளி கழிவுநீர் தொட்டியில் விழுந்து சிறுமி பலி: சாவில் சந்தேகம் இருப்பதாக உறவினர்கள் போராட்டம்

தாளாளர், முதல்வர், ஆசிரியை கைது

விக்கிரவாண்டி, ஜன.4

விக்கிரவாண்டியில் செயிண்ட்மேரிஸ் பள்ளி கழிவுநீர் தொட்டியில் விழுந்து சிறுமி பலியானாள். பள்ளி நிர்வாகத்தை கண்டித்தும், சாவில் சந்தேகம் இருப்பதாகவும் கூறி பெற்றோர், உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போலீசார் பள்ளி தாளாளர், முதல்வர், ஆசிரியரை கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி பழைய போலீஸ் நிலைய தெருவை சேர்ந்தவர் பழனிவேல்(வயது 34). இவர் விக்கிரவாண்டி தாலுகா அலுவலகத்தில் ஒப்பந்த ஊழியராக பணிபுரிந்து வருகிறார். இவரது மனைவி சிவசங்கரி(32).

இந்த தம்பதிக்கு லியா லட்சுமி(4) என்ற குழந்தை இருந்தது. மேலும் 2 மாத ஆண் குழந்தையும் உள்ளது.

விக்கிரவாண்டி செயின்ட் மேரிஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் சிறுமி லியா லட்சுமி, எல்.கே.ஜி. படித்து வந்தாள். வழக்கம்போல் நேற்று காலையில் சிறுமியை பெற்றோர் அழைத்துச்சென்று பள்ளிக்கூடத்தில் விட்டனர்.

மதியம் 12 மணி அளவில் மதிய உணவு இடைவேளையின்போது மாணவ, மாணவிகள்சாப்பிட்டுவிட்டு, வளாகத்தில் விளையாடினர். பின்னர் உணவு இடைவேளை முடிந்ததும் அனைவரும் வகுப்பறைக்கு சென்றனர். அப்போது சிறுமி லியா லட்சுமி மட்டும் வகுப்பறையில் இல்லை. உடனே அவர், வேறு வகுப்பறைக்கு சென்றுவிட்டாளா என்று வகுப்பாசிரியை தேடிப்பார்த்தார். ஆனால் எந்த வகுப்பறையிலும் அவள் இல்லை.

சிறுமிகள் விளையாடிய இடம் மற்றும் கழிப்பறை பகுதிக்கு சென்று பார்த்தார். அப்போது கழிவுநீர் தொட்டியின் (செப்டிக் டேங்க்) இரும்பினால் ஆன மேல் மூடி உடைந்து கிடந்தது.

மூடி வழியாக உற்றுப்பார்த்தபோது, கழிவுநீர் தொட்டியில் சிறுமி கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். உடனே அவர், பள்ளி நிர்வாகத்திற்கு தகவல் தெரிவித்தார். பள்ளி ஊழியர்கள், அந்த சிறுமியை மீட்டு சிகிச்சைக்காக விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு சிறுமியை பரிசோதித்த டாக்டர்கள், ஏற்கனவே சிறுமி லியா லட்சுமி இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

முதல்அமைச்சர் ஸ்டாலின் இரங்கல் ரூ.3 லட்சம் நிவாரண நிதி வழங்க உத்தரவு

தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி மேற்கு கிராமத்தை சேர்ந்த பழனிவேல் என்பவரின் 5 வயது குழந்தை லியா லட்சுமி, விக்கிரவாண்டியில் உள்ள தனியார் பள்ளியில் படித்து வந்தர். இந்த நிலையில், அவர் பள்ளியில் இருந்த கழிவு நீர்த் தொட்டியில் எதிர்பாராதவிதமாக தவறி விழுந்து உயிரிழந்த துயரமான செய்தியை கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன், இந்த சம்பவத்தில், உயிரிழந்த குழந்தை லியா லட்சுமியின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும், எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். உயிரிழந்த குழந்தையின் பெற்றோருக்கு, ரூ.3 லட்சம் முதல் அமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

வழக்கம் போல் தாத்தா கார்மேகம் குழந்தையை பள்ளியிலிருந்து அழைத்து செல்ல வந்த போது குழந்தை வெளியே வராததால் உள்ளே சென்று பார்த்த போது குழந்தை செப்டிக் டேங்கில் விழுந்து விட்டதாகவும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளதாகவும் தாத்தா கார்மேகத்திடம் கூறியுள்ளனர்.

தகவல் அறிந்த பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்கள் பள்ளியின் அருகே இருந்த செப்டிக் டேங்க் பகுதியை பார்த்துள்ளனர். அங்கு குழந்தை செப்டிக் டேங்கில் விழுந்ததற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை, இதனால் அங்கிருந்த மற்ற குழந்தைகளின் பெற்றோர்கள் பள்ளி நிர்வாகத்தின் அலட்சியத்தால் குழந்தை இறந்தாக குறித்து பள்ளி முன்பு கூடி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்ககோஷமிட்டனர்.

மேலும் குழந்தை செப்டிக் டேங்கில் விழுந்ததிற்கான எந்த தடயமும் இல்லை குழந்தையின் உடம்பில் சிராய்ப்பு காயங்கள், துணி ஈரமாக இல்லை எனவும், வேறு எந்த வகையிலோ குழந்தை இறந்துள்ளதை அதை கூறாமல் நிர்வாகம் மூடி மறைப்பதாக பொதுமக்கள் குற்றசாட்டி இறப்பிற்கான உண்மையான காரணம் தெரிய வேண்டும் எனக் கூறி சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இது பற்றி தகவலறிந்த விக்கிரவாண்டி டி.எஸ்.பி., நந்தகுமார், இன்ஸ்பெக்டர் பாண்டியன், விஜயகுமார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து பெற்றோர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

இது குறித்து குழந்தையின் தந்தை பழனிவேல் விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் தனது குழந்தை மர்மமான முறையில் இறந்ததாக கூறி பள்ளி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகார் அளித்தார். அதன் பேரில் போலீசார் குழந்தையின் உயிரிழப்பை சந்தேக மரணமாக வழக்கு பதிந்து பள்ளி முதல்வர் டோமியா மேரி, தாளாளர் இமால்டா, ஆசிரியை ஏஞ்சல் ஆகிய மூன்று பேரை நள்ளிரவில் கைது செய்து விழுப்புரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

பெற்றோர்களிடம் உடல் ஒப்படைப்பு

இந்நிலையில் இன்று காலை பிரேத பரிசோதனைக்குப் பின் சிறுமியின் உடல் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , 2025 ஆண்டுக்கான சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடர் நடைபெறவுள்ளதால் சட்டமன்றப் பேரவை அரங்கத்தினை ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வில் பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் மங்கத் ராம் சர்மா, முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம் எஸ்.மணிவண்ணன் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் வறுமை முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது

தமிழக அரசு பெருமிதம்

சென்னை, ஜன.4

தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற பின்பு தமிழ்நாட்டில் வறுமை முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற பின்பு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை வாயிலாக நிறைவேற்றப்பட்டுள்ள புதிய திட்டங்களால் தமிழ்நாட்டில் வறுமை முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது.

வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது.

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுரைப்படி ஏழை, எளிய பொதுமக்களின் வசதிக்காக 633 முழுநேர நியாய விலை கடைகளும், 1,033 பகுதி நேர நியாய விலை கடைகளும் என மொத்தம் 1,666 நியாய விலை கடைகள் புதிதாக திறக்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் விளைவிக்கும் நெல்லினை இடைத்த ரகர்கள் தலையீடின்றியும், கால தாமதமின்றியும் உடனடியாக விற்பனை செய்யும் பொருட்டு ஆன்லைன் பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டு 1 கோடியே 8 லட்சத்து 35 ஆயிரத்து 621 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தில் பணியின்போது உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 233 பேருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தில் 2012ம் ஆண்டு முதல் பருவகால பணியாளர்கள் 591 பேர் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

விவசாயிகளின் நலன் கருதி நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு படிப்படியாக கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது. 40 மாதங்களில் 230 நெல் கொள்முதல் நிலைய கட்டிடங்கள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டு, இதுவரை 130 நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

விவசாயின் கடின உழைப்பால் விளைவிக்கப்பட்டு, கொள்முதல் செய்யப்படும் நெல் வீணாகக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு ரூ.358.78 கோடி மதிப்பீட்டில் 259 மேற்கூரை அமைப்புடன்கூடிய நெல் சேமிப்பு தளங்களை நிறுவ திட்டமிடப்பட்டது. அதன்படி, 213 நெல் சேமிப்புத் தளங்கள் கட்டப்பட்டு எஞ்சியவை கட்டப்பட்டு வருகின்றன.

தேசிய கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் கீழ் அதிக எண்ணிக்கையிலான சேமிப்பு கிடங்குகளை பதிவு செய்ததற்காக தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்திற்கு ஒன்றிய அரசு முதல் பரிசு வழங்கி பாராட்டியுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, உணவுத்துறையில் தன்னிறைவு அடைவதற்காக புதிய பல திட்டங்கள் தந்து தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி சாதனைகள் நிகழ்த்தி அனைவரின் கவனத்தையும் ஈர்த்து வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

SMFG Grihashakti
எஸ்எம்எஃஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கோ. லிமிடெட்
(முன்பு புல்லர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கோ. லிமிடெட்)
பதிவு அலுவலகம் : காமர்ஸ்சோன் ஐடி பார்க், டவர் பி, முதல் தளம், எண்.111, மவுண்ட் பூந்தமல்லி சாலை, போரூர், சென்னை 600 116, தமிழ்நாடு. கட்டணமில்லா எண். 1800 102 1003
கார்ப்பரேட் அலுவலகம் : 503 - 504, லெவல் 5, இன்சிப்ரே பிகேசி, மெயின் ரோடு, ஜி பிளாக், பிகேசி, பாந்த்ரா கிழக்கு, மும்பை 400051.
மின்னஞ்சல் முகவரி : grihashakti@grihashakti.com இணையதளம் : www.grihashakti.com
இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு
ஏப்ரல் 05, 2025 முதல் செயல்பாட்டுத் தேவைகளுக்காக பின்வரும் கிளையின் செயல்பாடுகளை மாற்ற உள்ளோம் என்று இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.
கிளையின் பெயர்: சென்னை | அஞ்சல் முகவரி: 1வது தளம், மேக் டவர், பழைய எண். 307, புதிய எண். 165, பூந்தமல்லி நெடுஞ்சாலை, மதுரவாயல், சென்னை 600095.
இந்தக் கிளையில் உள்ள வாடிக்கையாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளை மூலம் ஏப்ரல் 05, 2025 முதல் சேவை வழங்க மாற்று ஏற்பாட்டை செய்துள்ளோம்.
கிளையின் பெயர் : சென்னை | அஞ்சல் முகவரி: எஸ்எம்எஃஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், 3வது தளம், எண்.3362 - V, AE பிளாக், 10வது மெயின் ரோடு, அண்ணா நகர், சென்னை, தமிழ்நாடு 600040.
எஸ்எம்எஃஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கோ. லிமிடெட்டிற்காக (முன்பு புல்லர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கோ. லிமிடெட்)
அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிட்டவர்

PUBLIC NOTICE
NOTICE is hereby given that the below mentioned Authorised Person is no longer affiliated as Authorised Person of Kotak Securities Limited.

Authorised Person Name	Trade Name	Exchange Registration Numbers of Authorised Person	Address of Authorised Person
K FIDEL CARCIAS	K FIDEL CARCIAS	NSE - AP0291565541	8A School Cross Street Koyembedu Chennai Chennai 600107
		MCX - 169047	

Please note that above mention Authorised Person (AP) is no longer associated with us. Any person henceforth dealing with above mention AP should do so, at their own risk. Kotak Securities Ltd. shall not be liable for any such dealing. In case of any queries for the transactions till date, Investors are requested to inform Kotak Securities Ltd. within 15 days from the date of this notification, failing which it shall be deemed that there exists no queries against the above mentioned AP.
kotak Kotak Securities Limited. Registered Office: 27 BKC, C 27, G Block, Bandra Kurla Complex, Bandra (E), Mumbai 400051. CIN: U99999MH1994PLC134051, Telephone No.: +22 43360000, Fax No.: +22 67132430. Website: www.kotak.com / www.kotaksecurities.com. Correspondence Address: Infinity IT Park, Bldg. No 21, Opp. Film City Road, A K Vaidya Marg, Malad (East), Mumbai 400097. Telephone No: 42856825. SEBI Registration No: INZ000200137(Member of NSE, BSE, MSE, MCX & NCDEX) , AMFI ARN 0164, PMS INP000000258 and Research Analyst INH000000586. NSDL/CDSL: : IN-DP-629-2021. Compliance Officer Details: Mr. Hiren Thakkar Call: 022 - 4285 8484, or Email: ks.compliance@kotak.com

SMFG Grihashakti
எஸ்எம்எஃஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கோ. லிமிடெட்
(முன்பு புல்லர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கோ. லிமிடெட்)
பதிவு அலுவலகம் : காமர்ஸ்சோன் ஐடி பார்க், டவர் பி, முதல் தளம், எண்.111, மவுண்ட் பூந்தமல்லி சாலை, போரூர், சென்னை 600 116, தமிழ்நாடு. கட்டணமில்லா எண். 1800 102 1003
கார்ப்பரேட் அலுவலகம் : 503 - 504, லெவல் 5, இன்சிப்ரே பிகேசி, மெயின் ரோடு, ஜி பிளாக், பிகேசி, பாந்த்ரா கிழக்கு, மும்பை 400051.
மின்னஞ்சல் முகவரி : grihashakti@grihashakti.com இணையதளம் : www.grihashakti.com
கிளையை மூடுவதற்கான பொது அறிவிப்பு
ஏப்ரல் 4, 2025 முதல் செயல்பாட்டுத் தேவைகளுக்காக பின்வரும் கிளையின் செயல்பாடுகளை நிறுத்த உள்ளோம் என்று இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.
கிளையின் பெயர்: சென்னை (OMR) | அஞ்சல் முகவரி: 1வது தளம், எண். 141, யாழினி வளாகம், பர்மா காலனி, 1வது பிரதான சாலை, பெருங்குடி, தமிழ்நாடு 600096.
இந்தக் கிளையில் உள்ள வாடிக்கையாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளை மூலம் ஏப்ரல் 04, 2025 முதல் சேவை வழங்க மாற்று ஏற்பாட்டை செய்துள்ளோம்.
கிளையின் பெயர் : சென்னை | அஞ்சல் முகவரி: எஸ்எம்எஃஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், 3வது தளம், எண்.3362 - V, AE பிளாக், 10வது மெயின் ரோடு, அண்ணா நகர், சென்னை, தமிழ்நாடு 600040.
எஸ்எம்எஃஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கோ. லிமிடெட்டிற்காக (முன்பு புல்லர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கோ. லிமிடெட்)
அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிட்டவர்

SHRIRAM Finance
ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்)
பொது அறிவிப்பு
இதன் மூலம் எங்களது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், எங்களது செய்யூர் கிளை அலுவலகம் முதல் தளம், எண்.82/11, சால்ட் சாலை, மீனாட்சி திருமண மண்டபம் எதிரில், செய்யூர், காஞ்சிபுரம், தமிழ்நாடு – 603 302 என்ற முகவரியிலிருந்து முதல் தளம், எண்.A–2/68, சால்ட் சாலை, கனரா வங்கி மாடியில், செய்யூர் கிராமம், செங்கல்பட்டு, செய்யூர், காஞ்சிபுரம், தமிழ்நாடு – 603 302 என்ற முகவரிக்கு 7 ஏப்ரல், 2025 முதல் மாற்றப்படுகிறது.
வாடிக்கையாளர்கள் தங்களது தேவைகளுக்கு புதிய அலுவலக வளாகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
பிராந்திய வர்த்தக தலைவர்

SHRIRAM Finance
ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்)
பொது அறிவிப்பு
இதன் மூலம் எங்களது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், எங்களது முசிறி - I கிளை அலுவலகம் முதல் தளம், எண்.22/5, விஜய் காம்ப்ளக்ஸ், ஐசிஐசிஐ வங்கி மாடியில், சேலம் மெயின் ரோடு (புறவழிச் சாலை), முசிறி, தமிழ்நாடு – 621 211 என்ற முகவரியிலிருந்து முதல் தளம், எண்.23/6–1, மகாலட்சுமி காம்ப்ளக்ஸ், எல்ஐசி பில்டிங், எச்டிஎப்சி வங்கி மாடியில், முசிறி, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு – 621 211 என்ற முகவரிக்கு 7 ஏப்ரல், 2025 முதல் மாற்றப்படுகிறது.
வாடிக்கையாளர்கள் தங்களது தேவைகளுக்கு புதிய அலுவலக வளாகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
பிராந்திய வர்த்தக தலைவர்

SHRIRAM Finance
ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்)
பொது அறிவிப்பு
இதன் மூலம் எங்களது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், எங்களது ஈரோடு - III கிளை அலுவலகம் 5/1, கால்நடை மருத்துவமனை சாலை, ஈரோடு, தமிழ்நாடு – 638 001 என்ற முகவரியிலிருந்து முதல் தளம், எண்.40, செல்லம்மாள் காம்ப்ளக்ஸ், விசிடிவி மெயின் ரோடு, ஈரோடு, தமிழ்நாடு – 638 003 என்ற முகவரிக்கு 7 ஏப்ரல், 2025 முதல் மாற்றப்படுகிறது.
வாடிக்கையாளர்கள் தங்களது தேவைகளுக்கு புதிய அலுவலக வளாகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
பிராந்திய வர்த்தக தலைவர்

SHRIRAM Finance
ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்)
பொது அறிவிப்பு
இதன் மூலம் எங்களது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், எங்களது சித்தாபூதூர் கிளை அலுவலகம் எண்.117, எம்.எஸ். காம்ப்ளக்ஸ், I வாரி அபார்ட்மெண்ட் எதிரில், நியூ சித்தாபுதூர், கோயம்புத்தூர், தமிழ்நாடு – 641 044 என்ற முகவரியிலிருந்து இரண்டாவது தளம், மேப்பிள் டவர், எண்.100/2, ராஜாஜி சாலை, ராம்நகர், கோயம்புத்தூர், தமிழ்நாடு – 641 009 என்ற முகவரிக்கு 7 ஏப்ரல், 2025 முதல் மாற்றப்படுகிறது.
வாடிக்கையாளர்கள் தங்களது தேவைகளுக்கு புதிய அலுவலக வளாகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
பிராந்திய வர்த்தக தலைவர்

SHRIRAM Finance
ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்)
பொது அறிவிப்பு
இதன் மூலம் எங்களது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், எங்களது மடிப்பாக்கம் கிளை அலுவலகம் முதல் தளம், 3/187, மடிப்பாக்கம் கூட்டு ரோடு, கணேஷ் மஹால் எதிரில், மடிப்பாக்கம், சென்னை, தமிழ்நாடு – 600 091 என்ற முகவரியிலிருந்து முதல் தளம், மனை எண்.6C, மேடவாக்கம் பிரதான சாலை, மடிப்பாக்கம் கூட்டு ரோடு, மடிப்பாக்கம், காஞ்சிபுரம், தமிழ்நாடு – 600 091 என்ற முகவரிக்கு 7 ஏப்ரல், 2025 முதல் மாற்றப்படுகிறது.
வாடிக்கையாளர்கள் தங்களது தேவைகளுக்கு புதிய அலுவலக வளாகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
பிராந்திய வர்த்தக தலைவர்

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் — சுவாதீன அறிவிப்பு
Kotak Mahindra Bank
பதிவு அலுவலகம்: 27BKC, C 27, G - பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை 400 051
கிளை அலுவலகம்: மனை எண். 7, 7வது தளம், செக்டார் 126, நொய்டா, உத்தரப்பிரதேசம் 201 313
கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் (54 ஆம் 2002) கீழும் மற்றும் பிரிவு 13(12)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிமுறைகளின் 9வது விதிமுறைக்கு ஏற்ப, கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை, திரும்ப செலுத்தும் நாள் வரையிலான வட்டி, செலவினங்கள் மற்றும் இதர கட்டணங்களை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். எனினும், மேற்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் /உடன்கடன்தாரர்கள் பாக்கித் தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள், உடன்கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தில் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதிகளுக்கு இணங்கவும், கீழ்க்கண்ட தேதியன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்களுக்கு குறிப்பாக, பொதுமக்களுக்கு பொதுவாக எச்சரிக்கப்படுவது யாதெனில், அடையாளம் சுவாதீனம் எடுத்துக் கொண்ட அசையா சொத்து கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு குறிப்பிட்ட தொகை மற்றும் எதிர்கால வட்டி, செலவுகள் மற்றும் அந்தந்த தேதியிலிருந்து கட்டணங்கள் ஆகியவற்றுக்கு பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. பிரிவு 13(2)–ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பிய தேதி, நிலுவைத் தொகை, சொத்தின் விவரம், கடன்தாரர்கள் விவரம் மற்றும் செலுத்த வேண்டிய தொகை மற்றும் சுவாதீனம் எடுத்த தேதி ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கடன்தாரர், உடன்கடன்தாரர் / உத்தரவாததாரர் பெயர் மற்றும் முகவரி கடன் கணக்கு எண். கடன் தொகை	அசையா சொத்தின் விவரம்	1. சுவாதீனத் தேதி 2. சுவாதீன வகை 3. டிமாண்ட் நோட்டீஸ் தேதி 4. நிலுவைத் தொகை ரூ.
திரு.சரவணன் குமரேசன் S/O மறைந்த குமரேசன் & திருமதி கங்கா சரவணன் வசிப்பிடம்: கதவு எண். 02, தாமரைநகர் நகர் குருகப்பட்டு, கிராமம், சிங்கபாரேபேட்டை அஞ்சல், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி தமிழ்நாடு 635307. கடன் கணக்கு எண்: 5C8BLSF0915741 கடன் தொகை: ரூ.10,32,999/-(ரூபாய் பத்து லட்சத்து முப்பத்து இரண் டாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது மட்டும்)	சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். எஸ்.எண். 10/1b3 தரிசு நிலம் விஸ்தீரணம் ஹெக். 1.57.5, மதிப்பீடு ஆர்.எஸ். 2.40 இந்த பதிய துணைப்பிரிவில் சர்வே எண். 10/1b3a தரிசு நில விஸ்தீரணம் ஹெக். 1.53.5, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், ஊத்தங்கரை சார் பதிவு மாவட்டம், ஊத்தங்கரை தாலுக்கா, குருகப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ளது. எல்லைகள்: தெற்கில் தெரு, மேற்கில் வழி, கிழக்கில் திரு. சலீமுக்கு சொந்தமான நிலம், வடக்கில்: திரு. சங்கருக்கு சொந்தமான நிலம். இதன் மத்தியில் விஸ்தீரணம்: கிழக்கிலிருந்து மேற்காக இருபுறமும் : 40 அடி, தெற்கிலிருந்து வடக்காக இருபுறமும் 19 அடி. மொத்தம் 19x40= 760 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலம். அடமானதாரர் பெயர்: திரு. சரவணன் S/o. திரு குமரேசன்	1. 02.01.2025 2.அடையா சுவாதீனம் 3. 07.06.2024 4. 05.12.2024 அன்று செலுத்த வேண்டிய நிலுவை தொகை ரூ.11,33,510.81/- (ரூபாய் பதினொரு லட்சத்து முப்பது மூன்றாயிரத்து நூறுற்று பத்து மற்றும் எண்பத்தொரு பைசா மட்டும்) மற்றும் 06.12.2024 முதல் முழு தொகையும் செலுத்தும் நாள் வரையிலான பொருந்தக்கூடிய வட்டி
திரு. ராஜபாண்டியன் M, S/o திருமகிலாமணி N & திருமதி. ஹேமலதா R. W/o. திரு ராஜபாண்டியன் M &M/s. ராஜபாண்டியன் எல்டோஸ் சார்பாக அதன் உரிமையாளர், அலையரது வசிப்பிடம்: எண்.55 பிள்ளையார் கோவில் தெரு கோட்டையூர் திருவண்ணாமலை, வேலூர், தமிழ்நாடு 606753 கடன் கணக்கு எண்: U95BLS72282536 கடன் தொகை: ரூ. 9,21,500/- (ரூபாய் எட்டு லட்சத்து இருபத்தோராயிரத்து ஐநூறு மட்டும்).	அடமான சொத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும், எஸ்.எப்.எண்.35/1ஏ, கதவு எண்.1/55, பிள்ளையார் கோவில் தெரு, கோட்டையூர் கிராமம், தண்டராம்பட்டு தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம், தமிழ்நாடு. அடமானதாரர் பெயர் : ராஜபாண்டியன் M	1. 02.01.2025 2.அடையா சுவாதீனம் 3. 04.09.2024 4. 14.11.2024 அன்று செலுத்த வேண்டிய நிலுவை தொகை ரூ.4,96,472/– (ரூபாய் நான்கு லட்சத்து தொன்னூற்று ஆறாயிரத்து நானூற்று எழுபத்தொன்டு பைசா மட்டும்) மற்றும் 15.11.2024 முதல் முழு தொகையும் செலுத்தும் நாள் வரையிலான பொருந்தக்கூடிய வட்டி

தேதி : 04.01.2025
இடம்: தமிழ்நாடு
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்
இதர விவரங்களுக்கு திரு.அரவிந்த் திவாரி (மொபைல் எண். +919810698044) மற்றும் திரு. சைலேந்தர் சிங் (மொபைல் எண். +918655793599) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்

IndiaShelter Home Loans
இந்தியா ஷெல்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிட். — கோரிக்கை அறிவிப்பு
பதிவு அலுவலகம்: 6வது தளம், மனை